# தமிழ்நாடு அரசு

## வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித்துறை

பிரிவு : TNPSC Group II தேர்வு

பாடம் : பொதுத்தமிழ் (இலக்கியம்)

பகுதி : **தமிழில் கடித இலக்கியம் - நாட்குறிப்பு**

**காப்புரிமை**

தமிழ்நாடு அரசுப் பணியாளர் தேர்வாணையம் குரூப் - 2 முதல்நிலை மற்றும் முதன்மை தேர்வுகளுக்கான காணொலி காட்சி பதிவுகள், ஒலிப்பதிவு பாடக்குறிப்புகள், மாதிரி தேர்வு வினாத்தாள்கள் மற்றும் மென்பாடக்குறிப்புகள் ஆகியவை போட்டித் தேர்விற்கு தயாராகும் மாணவ, மாணவிகளுக்கு உதவிடும் வகையில் வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையால் மென்பொருள் வடிவில் தயாரிக்கப்பட்டுள்ளது. இம்மென்பாடக் குறிப்புகளுக்கான காப்புரிமை வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறையைச் சார்ந்தது என தெரிவிக்கப்படுகிறது.

எந்த ஒரு தனிநபரோ அல்லது தனியார் போட்டித் தேர்வு பயிற்சி மையமோ இம்மென்பாடக் குறிப்புகளை எந்த வகையிலும் மறுபிரதி எடுக்கவோ, மறு ஆக்கம் செய்திடவோ, விற்பனை செய்யும் முயற்சியிலோ ஈடுபடுதல் கூடாது. மீறினால் இந்திய காப்புரிமை சட்டத்தின் கீழ் தண்டிக்கப்பட ஏதுவாகும் என தெரிவிக்கப்படுகிறது. இது முற்றிலும் போட்டித் தேர்வுகளுக்கு தயார் செய்யும் மாணவர்களுக்கு வழங்கப்படும் கட்டணமில்லா சேவையாகும்.

**ஆணையர்,**
**வேலைவாய்ப்பு மற்றும் பயிற்சித் துறை**

# தமிழில் கடித இலக்கியம் - நாட்குறிப்பு

## கடித இலக்கியம்

- ஆள் மூலம் சொல்லி அனுப்புவது - தூது.
- சொல்லி அனுப்ப இயலாதனவற்றை எழுத்து ஆணிக்கொண்டு பனை ஓலையில் எழுதினர். அது முடங்கல் எனப்பட்டது.
- பத்திரம் என்னும் வடமொழிக்கு இலை என்று பொருள்.
- கடி என்றால் விரைவு என்று பொருள் விரைவாக சென்று சேர்வதால் கடிதம் எனப்படுகிறது.
- பண்டைய காலத்தில் கடிதப் போக்குவரத்திற்காக பயன்படுத்தப்பட்டவை: புறா, நாய், கிளி.
- பாடல்கள் மூலம் கடிதம் எழுதும் முறை சீட்டுக்கவி ஆகும்.

### ஜவஹர்லால் நேரு:

- நேரு 1889ல் பிறந்தார்.
- நேருவுக்கு 1917ல் இந்திராகாந்தி பிறந்தார்.
- நேரு இந்திராகாந்திக்கு 1922 - 1964 வரை 42 ஆண்டுகள் கடிதம் எழுதினார்.
- இந்திராகாந்தி 1934 ல் மேற்கு வங்காளத்தில் உள்ள ரவீந்தரநாத் தாகூர் நடத்திய விசுவபாரதி பல்கலைக்கழகத்தில் சேர்ந்து படித்தார்.
- 1935 நேரு உத்திராஞ்சல் மாநிலத்தில் உள்ள அல்மோரா சிறையில் அடைக்கப்பட்டவர் - நேரு.
- அல்மோரா சிறைச்சாலையில் இருந்து 1935 பிப்ரவரி 22 ல் இந்திராகாந்திக்கு கடிதம் எழுதியவர் -நேரு.
- நேரு தன் மகளுக்கு எழுதிய கடிதங்கள் உலக வரலாறு என்னும் பெயரில் வெளிவந்தன.

### நேருவின் கடிதச் செய்திகள்:

- ஆயிரம் முகங்கள் கொண்டது வாழ்க்கை அதனைப் புரிந்து கொள்ளவும் முறையாக வாழவும் புத்தகப் படிப்பு இன்றியமையாதது என்று கூறியவர் - நேரு.
- தனியொரு மனிதனின் பட்டறிவு மிகவும் குறுகியது என்றவர் - நேரு.
- புத்தகம் வாசிப்பதனைக் கடமையாக ஆக்குதல் கூடாது, கட்டாயப்படுத்தவும் கூடாது. அப்படி செய்தால் புத்தக வாசிப்பு மகிழ்ச்சியை தராது வெறுப்பே உண்டாக்கும் என்று கூறியவர் - நேரு.
- இந்திராகாந்தியின் ஆசிரியர் சுசேதா கிருபாளினி.
- நேரு படித்த பல்கலைக்கழகம் - கேம்பிரிட்ஜ் (இங்கிலாந்து).
- பிளாட்டோவின் புத்தகங்கள் சுவையானவை எனக் கூறியவர் - நேரு.
- நேரு, தனக்கு மிகவும் பிடித்தமானவர் என குறிப்பிடுவது - பெட்ரண்ட் ரஸ்ஸல்.

- ❖ நேரு கடிதத்தில் குறிப்பிடும் அற்புதமான ஆங்கிலப் படைப்பாளிகள் -ஷேக்ஸ்பியர் மற்றும் மில்டன்.
- ❖ கிரேக்க சிந்தனையாளர் பிளாட்டோவின் புத்தகங்கள் சுவையானவை, சிந்தனையைத் தூண்டுபவை எனக் கூறியவர் - நேரு.
- ❖ கிரேக்க நாடகங்கள் தன் ஆர்வத்தை துண்டுவதாக கூறியவர் - நேரு.
- ❖ வடமொழி நாடக ஆசிரியரான காளிதாசரின் சாகுந்தலம் நாடகத்தை வாசிக்க வேண்டிய நூல் என குறிப்பிட்டவர் - நேரு.
- ❖ உலகின் மிகச் சிறந்த நூல்களில் ஒன்று என நேரு குறிப்பிடும் நூல் - டால்ஸ்டாயின் போரும் அமைதியும்.

**நேருவின் நூல்கள்:**

1. சுயசரிதை (Autobiography)
2. உலக வரலாற்றுக் காட்சிகள் (Glimpses of World History)
3. புதிய இந்தியாவைக் காணல் (The Discovery of India)

**நேரு கடித இலக்கியத்தில் குறிப்பிட்டுள்ள ஆசிரியர்கள் மற்றும் கவிஞர்கள்:-**

| சேக்ஸ்பியர் | ஆங்கில நாடக ஆசிரியர் |
|---|---|
| மில்டன் | ஆங்கில கவிஞர் |
| பெர்னார்ட் ஷா | ஆங்கில நாடக ஆசிரியர் |
| பிளாட்டோ | கிரேக்க சிந்தனையாளர் |
| காளிதாசர் | வடமொழி நாடக ஆசிரியர் |
| டால்ஸ்டாய் | ரஷ்ய நாட்டு எழுத்தாளர் |
| பெட்ரண்ட் ரஸ்ஸல் | சிந்தனையாளர், கல்வியாளர் |

## காந்தியடிகள்

**சிறப்புகள்:**

- ❖ மோகன் தாஸ் கரம்சந்த் காந்தி 2 - 10 - 1869 ல் குஜராத் மாநிலத்தில் போர்பந்தரில் பிறந்தார்.
- ❖ பெற்றோர் பெயர் - கரம்சந்த் உத்தம் சந்த் காந்தி, புத்லிபாய்.
- ❖ காந்தியின் மனைவி - கஸ்தூரிபாய்.

**2.10.1917 ஆம் ஆண்டு புரோச் நகரில் நடைபெற்ற இரண்டாவது கல்வி மாநாட்டில் காந்தியடிகள் நிகழ்த்திய தலைமை உரை கடித வடிவில் தொகுக்கப்பட்டுள்ளது:**

- ❖ கல்வி கற்பித்தலில் நாம் செய்ய வேண்டிய முதற் செயல் - பயிற்று மொழி குறித்து முடிவு செய்தல்.
- ❖ பயிற்று மொழியைக் குறித்து சிந்திக்காமல் கல்வி கற்பிப்பது அடித்தளம் இல்லாமல் கட்டிடத்தை எழுப்புவதனைப் போன்றது என்று கூறியவர் - காந்தியடிகள்.

- கவி இரவீந்திரநாத் தாகூரின, ஈர்ப்பான இலக்கிய நடையின் உயர்வுக்குக் காரணம் ஆங்கிலத்தில் அவருக்கு உள்ள அறிவு மட்டுமன்று அவரின் தாய்மொழி பற்று ஆகும் .
- முன்சிராம், பேசும் பொழுது குழந்தைகள், ஆண்கள், பெண்கள் அனைவரும் மிகுந்த ஈடுபாட்டுடன் கேட்கிறார்கள், இதற்குக் காரணம் அவர்தம் தாய்மொழி அறிவே எனக் கூறியவர் - காந்தியடிகள்
- வேலை தெரியாத தொழிலாளி தன் கருவியின் மீது சீற்றம் கொண்டானாம் - ஆங்கில பழமொழி .
- மக்கள் அறிவுள்ளவர்களாக இருந்தால் அவர்தம் மொழியும் அவ்வாறே அமையும் - காந்தியடிகள்.
- குறைபாடு மொழியை பயன்படுத்துபவர்களிடம் இருக்கிறதே அன்றி மொழியில் இல்லை.
- தாய் மொழியின் மூலம் கல்வி அளிக்கப்பட்டிருந்தால் நம்மிடையே பல போஸ்களும், இராய்களும் தோன்றி இருப்பார்கள் என்று கூறியவர் - காந்தியடிகள்.
- பள்ளிக்கூடம் வீட்டைப் போன்று இருக்க வேண்டும். குழந்தைகளுக்கு வீட்டில் தோன்றும் எண்ணங்களுக்கும, பள்ளியில் தோன்றும் எண்ணங்களுக்கும் நெருங்கிய தொடர்பு இருக்க வேண்டும்.
- தெரிந்திராத ஒரு மொழியின் மூலம் கல்வி கற்பிப்பது இணக்கத்தைக் குலைத்து விடும் - காந்தியடிகள்.
- “மதன் மோகன் மாளவியாவின் ஆங்கில பேச்சு வெள்ளியைப்போல் ஒளிவிட்டாலும், அவரது தாய் மொழிப் பேச்சு தங்கத்தை போல் ஒளிவீசுகின்றது” என்றவர்- காந்தியடிகள்.
- காந்தி படித்த நாடக நூல் சிரவண பிதுர்த்தி, பார்த்த நாடகம் அரிச்சந்திரன் நாடகம்.
- தீயவனை எதிர்க்காதே, அவனிடம் உள்ள தீமையை எதிர்த்து நில் - இயேசுவின் மலைச் சொற்பொழிவு.
- பகவத்கீதையை படித்து மன உறுதியை பெற்றவர் - காந்தியடிகள்.
- உன்னுள் இருக்கும் ஆண்டவனின் அரசு எனும் நூலில் “இன்னா செய்தார்க்கும்” என்ற திருக்குறளை மொழிபெயர்ப்பு செய்தவர் - டால்ஸ்டாய்.
- சோவியத் அறிஞர் டால்ஸ்டாய் வழகாட்டுதலால் திருக்குறளின் மூலத்தை அறிய விரும்பி தமிழ் கற்றேன் என்றவர் - காந்தி.
- மனிதனின் நோக்கம் உயர்ந்ததாகவும் தூய்மையானதாகவும் மட்டும் இருந்தால் போதாது. அதை அடையும் வழிமுறைகளும் தூய்மையானதாக இருக்கவேண்டும்” - காந்தி.
- நேதாஜி போன்றோர் போர் முறையை கையாண்டுதான் விடுதலை பெற முடியும் என்ற போது காந்தி வன்முறையை வன்முறையால் வெல்ல நினைப்பது தீயை தீயால் அணைக்க முற்படுவது போன்றது என்றார் காந்தி.
- தமிழ்நாட்டு விவசாயிகளை பார்த்து காந்தி உடை அணிவதை மாற்றிக்கொண்டார்.
- கழிப்பறை கழுவுதல் ஒரு கலை என்றவர்- காந்தி.
- காந்தியடிகளை அரை நிர்வாண பக்கிரி என்றவர் - வின்ஸ்டன்ட் சர்ச்சில்.

- கோடான கோடி மக்கள் உண்ண கஞ்சியும், உடுக்க உடையும் இல்லாமல் இருக்கும் பொழுது இப்படி பகட்டான வாழ்க்கை வாழ்வது பாவமல்லவா - காந்தி.
- என்னை பொறுத்தவரை தேசபிமானமும், மனிதாபிமானமும் ஒன்றுதான் - காந்தி.
- குஜராத்தியனாக இருப்பதைக் காட்டிலும், இந்தியனாக இருப்பதைக் காட்டிலும் மனிதனாக இருப்பதே பெருமைக்குரியது - காந்தி.
- காந்தியடிகள் தமிழ்நாடு வந்தபோது ஏழை உழவர்கள் வறுமையால் அரையாடை உடுத்தியதை கண்டார். தாமும் அன்று முதல் மேலாடை அணிவதை நிறுத்திக்கொண்டார்.
- உலகோர் அனைவரும் குறிக்கோள் உடையவராக இருந்தால் உலகமே நல்ல சமுதாயமாகும் - காந்தி.
- தென் ஆப்பிரிக்காவில் இந்தியருக்கு எதிரான கறுப்பு சட்டங்களை மீறியதால்சிறையில் அடைக்கப்பட்டவர் - காந்தி.
- காந்தி சிறையில் தைத்த செருப்புகளை தன்னை சிறையில் அடைத்த ஆளுநர் ஸ்மட்ஸ் என்பவருக்கு வழங்கினார். அதற்காக ஸ்மட்ஸ் பைபிள் சார்ந்த இரண்டு நூல்களை காந்திக்கு பரிசாக கொடுத்தார்.
- காந்தி சிறையில் தைத்த செருப்புகளை பூஜை அறையில் வைத்தவர்- ஸ்மட்ஸ்.
- 30 - 01 - 1948 ல் காந்தி சுட்டுக்கொள்ளப்பட்டார்.
- உள்நாட்டு பொருள் இயக்கமான சுதேசி இயக்கத்தை வளர்க்கும் கடமை இளைஞர்களுக்கே உரியது என்று காந்தி கூறினார்.
- காந்திபடத்தில் காந்தியாக நடித்தவர் - பென் கிங்ஸ்லி. புதுவைகாந்தி என அழைக்கப்படுபவர்- சண்முகம்.
- வாழும் காந்தி என அழைக்கப்படுபவர் - மாணிக்சர்க்கார் (திரிபுரா முதலமைச்சர்).

**விவேகானந்தர்**

- நாட்டில் சொன்னபடி செய்ய ஆளில்லை, ஆனால் கண்டபடி சொல்ல ஆள் ஏராளம் என்றவர் - விவேகானந்தர்.
- அடக்கி ஒழுகுவதற்கு யாரும் இல்லை, அதனால் தான் வீழ்ச்சி நேர்ந்தது என்றவர் - விவேகானந்தர்.
- ஒரு நாட்டின் முன்னேற்றம் அந்நாட்டு மக்கள் பெற்றுள்ள கல்வி அறிவாற்றலை பொறுத்து அமையும் என்றவர் - விவேகானந்தர்.

## மு. வரதராசனார்ஸ்

- மு. வரதராசனாரின் இயற்பெயர் - வளவன்.
- தம்பிக்கு, தம்பி எழிலுக்கு எனக் கடிதம் எழுதியவர் -மு.வ.
- சாதி சமய வேறுபாடுகளை மறக்கக் கற்றுக்கொள், மறக்க முடியா விட்டால் புறக்கணிக்கக் கற்றுக்கொள் - மு. வரதராசனார்.
- தொண்டுக்கு முந்து, தலைமைக்கு பிந்து - மு. வரதராசனார்.
- குறட்டை ஒலி கதையை எழுதியவர் - மு. வரதராசனார்.

- ❖ தமிழ் நெஞ்சம் - மு. வரதராசனார் (கடையெழு வள்ளல்கள் பற்றி கூறியுள்ளார்).
- ❖ தமிழ் நாட்டிற்கும் தமிழ் மொழிக்கும் நன்மை செய்யாத செய்திதாள்களை விலக்கு என்றவர்- மு.வ.
- ❖ திருமணம் மற்றும் வழிபாடுகள் தமிழிலேயே நடத்தப்பட வேண்டும் என்றவர் -மு.வ.
- ❖ கடிதம், பணவிடை, விளம்பரப் பலகை, விற்பனைச் சீட்டு, முதலியவற்றை தமிழிலேயே எழுத வேண்டும் -மு.வ.
- ❖ தமிழ் ஆட்சி மொழியாகவும், கல்வி மொழியாகவும் வரவேண்டும் என முழங்கியவர் - மு.வ.
- ❖ ஏழை என்றும் அடிமை என்றும் எவரும் இல்லை என்ற பாரதியார் கண்ட கனவை போற்ற வேண்டும் -மு.வ.
- ❖ ஒன்றே குலம் ஒருவனே தேவன் என்ற செம்மொழியை போற்ற வேண்டும் எனக் கூறியவர் - மு.வ
- ❖ யாதும் ஊரே, யாவரும் கேளீர் என்ற கணியன் பூங்குன்றனார் கூறிய நிலையை பெற வேண்டும் - மு.வ.
- ❖ தமிழ் ஒன்றே தமிழரைப் பிணைத்து ஒற்றுமையாக்க வல்லது - மு.வ.
- ❖ உன் மொழியையும் நாட்டையும் போற்றுவதற்காக மற்றவர்களின் மொழியையும் நாட்டையும் தூற்றாதே, பழிக்காதே, வெறுக்காதே என்றவர் - மு.வ.
- ❖ அயலாரின் தாயைப் பழித்து வெறுக்காமலே நம் தாயிடம் அன்பு செலுத்த முடியும், அத்தகைய அன்பு தான் நிலையானது என்றவர் -மு.வ.
- ❖ கொள்கைகள், கட்சிகள், இயக்கங்களை விட நாட்டு மக்களின் நன்மையேப் பெரிது என்றவர் -மு.வ.
- ❖ உன் மானத்தைவிட நாட்டின் மானமே பெரிது என்றவர் - மு.வ.

**அண்ணாவின் கடிதம்**

**14.1.1968 ல் காஞ்சி இதழ் மூலம் அண்ணா எழுதிய கடிதத்தில் குறிப்பிடப்பட்டுள்ளவை:-**

- "புனலிடை மூழ்கிப் பொழிலிடை பேசி உலவிப்
  பொன்னின் இழையும் துகிலும் பூண்டு கனிமொழி பேசி" **- அறிஞர் அண்ணா**

- தமிழர் திருநாளாம் தை முதல் நாளாம்
  அமிழ்தென இனிக்கும் பொங்கல் திருநாள்
  உழைப்பின் உயர்வை உணர்த்தும் பெருநாள்
  புதுமையின்பம் பூணும் நன்னாள் என்று
  - முடியரசன் முழங்குகிறார் எனக் குறிப்பிட்டவர் **- அறிஞர் அண்ணா**

- ❖ பேருந்துகளில் திருவள்ளுவர் உருவமும், திருக்குறளும் எழுத சட்டம் இயற்றியவர் - அறிஞர் அண்ணா.
- ❖ திராவிட நாடு, காஞ்சி இதழ் மூலம் கடிதகங்கள் எழுதியவர் - அண்ணா.

- நான்மாடக்கூடலில் நிற்கின்றேன், நானிலம் போற்றிடும் தனிச் சிறப்பினைப் பெற்று தமிழகத்தின் அறிவுக்கோட்டமாய்த் திகழ்ந்து இம்மதுரையம்பதி என்ற எண்ணம் தந்திடும் எழுச்சி பொங்கிடும் நிலையில் நிற்கிறேன் என்றவர் - அண்ணா.
- 06 - 03 - 1967 ல் அண்ணா தமிழக முதலமைச்சர் ஆனார்.
- 14 - 04 - 1967 ல் சென்னை புனித ஜார்ஜ் கோட்டையில் தமிழ் நாடு அரசு தலைமை செயலகம் என்ற பெயர் பலகையை திறந்து வைத்தார்.
- 15 - 05 - 1967 ல் ஒரு ரூபாய்க்கு ஒரு படி அரிசி திட்டத்தை தொடங்கி வைத்தார்.
- 1967-ல் சமூக நலப்பணிகளில் இளைஞர்களை ஈடுபடுத்து சீரணி அமைப்பை தொடங்கி வைத்தார்.
- 1968-ல் போப்பிடம் சென்று கோவா விடுதலை வீரர் ரானடேவை விடுதலை அடையச் செய்தார்.
- ஆசிரியர் கல்கியால் தமிழ் நாடகக் கலைக்கு ஒரு பெர்னாட்ஷா என்று பாராட்டப்பட்டவர் - அறிஞர் அண்ணா.
- அயர்லாந்து நாட்டைச்சேர்ந்த ஜார்ஜ் பெர்னாட்ஷா புகழ்பெற்ற எழுத்தாளரும் சிறந்த நாடக ஆசிரியரும் ஆவார்.

## ஆனந்தரங்கர் நாட்குறிப்பு

| | | |
|---|---|---|
| ஊர் | - | பெரம்பூர் (சென்னை) |
| பெற்றோர் | - | திருவேங்கடம் (புதுவை திவான்) |
| காலம் | - | 30 - 03 - 1709 |
| மைத்துனர் | - | நைனியப்பர் |

**சிறப்புகள்:**

- எம்பார் என்பவரிடம் கல்வி கற்றவர் - ஆனந்தரங்கர்.
- டைஸ் என்ற இலத்தின் மொழி சொல்லுக்கு நாள் எனப் பொருள்.
- டைரியம் என்ற இலத்தின் மொழி சொல்லுக்கு நாட்குறிப்பு எனப் பொருள்.
- திவானாகவும், பாக்குக் கிடங்கும் நடத்தி வந்தவர் - ஆனந்தரங்கர்.
- துய்ப்ளெக்சு ஆளுநரின் மொழி பெயர்ப்பாளராக பணியாற்றியவர் - ஆனந்தரங்கர்.
- ஆனந்தரங்கர் 1736 முதல் 1761 வரை 25 ஆண்டுகள் நாட்குறிப்புகள் எழுதியுள்ளார்.
- தம் நாட்குறிப்பை தினப்படிச் செய்திக்குறிப்பு, சொஸ்த லிகிதம் என்றே பெயரிட்டவர் - ஆனந்தரங்கர்.
- லிகிதம் என்பதற்கு கடிதம் அல்லது ஆவணம் என்று பொருள்.
- சொஸ்தம் என்பதற்கு தெளிந்த (அ) உரிமையுடைய என்று பொருள்.
- பிரெஞ்சுக்காரர்களுக்கும் இந்திய மன்னர்களுக்கும் பாலமாய் இருந்தவர் - ஆன்ந்தரங்கர்.
- துபாசி என்பதன் பொருள் - இருமொழிப் புலமையுடையவர் (அ) மொழிப்பெயர்ப்பாளர்.

**ஆனந்த ரங்கர் நாட்குறிப்பில் குறிப்பிட்டுள்ள செய்திகள்:**

- பிரெஞ்சுப்படை காரைக்காலை பிடிக்கச் சென்று தோல்வியடைந்த செய்தி.
- தில்லியின் மீது பாரசீக படையெடுப்பு.

- இலயூர்தொனே கப்பல் பிரெஞ்சு நாட்டிலிருந்து சென்றது.
- வெளிநாட்டு பயணிகள் வந்த சென்ற நிகழ்வுகள்.
- குற்றவாளிகளுக்கு கடுமையான தண்டனை வழங்கிய செய்திகள்.
- ஆனந்த ரங்கரின் நாட்குறிப்பின் பெரும்பகுதி - வணிகச் செய்திகளே ஆகும்.
- முசபர்சங் 1749 ல் 3000 குதிரைகளை ஆனந்தரங்கருக்கு வழங்கியப் பட்டம் - மன்சுபேதார் பட்டம் வழங்கினார்.
- ஆனந்த ரங்கர் செங்கற்பட்டு கோட்டைக்கு தளபதியாகவும், அம்மாவட்டத்திற்கு ஜாகிர்தராகவும் இருந்தார்.
- சுங்குசேஷாசல செட்டியாரின் பெண்கள் இருவருக்கு நடைபெற்ற திருமண ஊர்வலத்தையும் திருமணம் நடைபெற்ற முறையையும், ஆளுநர் அத்திருமணத்திற்கு வந்திருந்ததனையும் ஆனந்த ரங்கர் எழுதிய நாட்குறிப்பின் வாயிலாக அறிய முடிகிறது.
- திருமண நாள் 09 - 06 - 1746 வியாழக்கிழமை சாயங்காலம் 6 மணிக்கு துரை முசே துய்ப்ளே அவரது மனைவி மாதாம் தெப்ரமேனி அரை நாழிகை உட்கார்ந்து (12 நிமிடம்), சாப்பிட்டது அரை நாழிகை இருந்தனர் என்ற செய்தியை குறிப்பிட்டவர் - ஆனந்தரங்கர்.
- முசே துய்ப்ளே வருகையிலே 21, உட்காரச்சே 21, சாப்பிடச்சே 21, எழுந்திருக்கச்சே 21 என 84 முறை பீரங்கி முழங்கியது.
- துரையவர்களுக்கு 1000 ரூபாயும், மதாமுக்கு100 ரூபாயும் வழங்கப்பட்டது.
- திருமணத்திற்கு வரும் மதிப்புமிக்கவர் -களுக்கு வெகுமாணம், மரியாதை அளிப்பது அன்றைய நடைமுறையாக இருந்ததை இதன் மூலம் அறியலாம்.
- உலக நாட்குறிப்பு இலக்கியத்தின் முன்னோடி பெப்பிசு.
- இந்தியாவின் பெப்பிசு என்றும் நாட் குறிப்பு வேந்தர் என்றும் போற்றப்படுபவர் - ஆனந்த ரங்கர்.
- அருணாச்சல கவிராயர் இராம நாடகத்தை திருவரங்கத்தில் அரங்கேற்றிய பின்னர் ஆனந்த ரங்கர் முன்னிலையிலும் அரங்கேற்றினார்.
- ஐதராபாத் நிஜம் ஆனந்த ரங்கருக்கு விசீர் மற்றும் குமார பனங்கல் என்ற பட்டங்களை வழங்கினார்.
- ஆனந்த ரங்கருடைய நாட்குறிப்புகள் அந்த காலத்தில் யாருமே புரிந்திராத இலக்கிய பணி என்றவர் - கே. கே. பிள்ளை.
- “தான் நேரில் கண்டும் கேட்டும் அறிந்துள்ளச் செய்திகளை சித்திரகுப்தனை போல் ஒன்றுவிடாமல் குறித்து வைத்துள்ளார்” என்றவர் வ.வே.சு. ஐயர்.

**ஆனந்தரங்கர் குறித்து வெளிவந்துள்ள இலக்கியங்கள்:-**

- ஆனந்த ரங்கர் கோவை - தியாகராச தேசிகர் எழுதினார்.
- ஆனந்த ரங்கன் தனிப்பாடல்கள் - தியாகராச தேசிகர் எழுதினார்.
- கள்வன் நொண்டிச் சிந்து - தியாகராச தேசிகர் எழுதினார்.
- ஆனந்த ரங்கன் பிள்ளைத்தமிழ் - அரிமதி தென்னகன் எழுதினார்.
- ஆனந்த ரங்கர் புதினங்கள் - அரிமதி தென்னகன் எழுதினார்.
- ஆனந்த ரங்க விஜயசம்பு - சீனிவாசக்கவி (வடமொழி) எழுதினார்.
- ஆனந்த ரங்க ராட்சந்தமு - கஸ்தூரிரங்கக் கவி (தெலுங்கு) எழுதினார்.